## திருநெல்வேலி மாநகராட்சி

## 2020ம் ஆண்டு ஜூன் மாதம் 19ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி வ.உ.சி. கட்டிடத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்

1) திருநெல்வேலி மாநகராட்சியில் மைய அலுவலகத்தில் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டி வருகை தரும் பொது மக்கள் சம்பந்தப்பட்ட துறைகளை எளிதாக அணுக வேண்டியும், அரசின் நலத் திட்டங்கள் குறித்தும் வழிகாட்டுவதற்கு ஏதுவாக மாநகராட்சி மைய அலுவலக தரைத்தளத்தில் செயல்பட்டுவரும் மக்கள் தொடர்பு அலுவலக பயன்பாட்டிற்கு வரவேற்பாளருடன் கூடிய தட்டச்சு பணியாளர் (Receptionist cum Typist) ஒருவரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண் M3/16361/2019, நாள் 02.07.2019-ல், 2019-20-ம் வருடத்தில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதின்படி, தட்டச்சருக்கான ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.393/-வீதத்திலும், மற்றும் ஆணையாளர் அவர்களால் மேற்கொள்ளப்படும் ஆய்வுப் பணிகள், ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் சீர்மிகுநகரத் திட்டத்தின் கீழ் நடைபெறும் பல்வேறுவளர்ச்சிப் பணிகள் ஆகிய நிகழ்வுகளை புகைப்படம் எடுத்து அவற்றை Edit செய்து ஊடகங்களுக்கு உடனுக்குடன் அனுப்பி விளம்பரபணிகள் மேற்கொள்ள ஏதுவாக புகைப்படக்கருவி இயக்குபவர் (Photographer) ஒருவருக்கான ஊதியம் நாள் ஒன்றுக்குரூ.359/- எனவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், அதற்குண்டான ESI, EPF, LWF உள்ளிட்ட இனங்களையும் உள்ளடக்கி மேற்குறிப்பிட்ட இரண்டு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக ஒருவருட காலத்திற்கு பணியமர்த்திக் கொள்வதற்கும், அதற்கு ஆகும் செலவுத் தொகைரூ.3.60 இலட்சத்திற்கும் மாமன்ற அனுமதிக்கு

அலுவலககுறிப்பு:

பொருளில் கண்டவாறு, திருநெல்வேலி மாநகராட்சி மைய அலுவலகத்தில் செயல்பட்டு வரும் மக்கள் தொடர்பு அலுவலக பயன்பாட்டிற்கு வரவேற்பாளருடன் கூடிய தட்டச்சு பணியாளர் (Receptionist cum Typist) ஒருவரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைஎண் M3/16361/2019, நாள் 02.07.2019-ல், 2019-20-ம் வருடத்தில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதின்படி, தட்டச்சருக்கான ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.393/-வீதத்திலும், மற்றும் ஆணையாளர் அவர்களால் மேற்கொள்ளப்படும் ஆய்வுப் பணிகள், ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் சீர்மிகுநகரத் திட்டத்தின் கீழ் நடைபெறும் பல்வேறுவளர்ச்சிப் பணிகள் ஆகிய நிகழ்வுகளை புகைப்படம் எடுத்து அவற்றை Edit செய்து ஊடகங்களுக்கு உடனுக்குடன் அனுப்பி விளம்பரபணிகள் மேற்கொள்ள ஏதுவாக புகைப்படக்கருவி இயக்குபவர் (Photographer) ஒருவருக்கான ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.359/- எனவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், அதற்குண்டானESI, EPF, LWF உள்ளிட்ட இனங்களையும் உள்ளடக்கி மேற்குறிப்பிட்ட இரண்டு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக ஒருவருட காலத்திற்கு பணியமர்த்திக் கொள்வதற்கும், அதற்கு ஆகும் செலவுத் தொகை ரூ.3.60 இலட்சத்திற்கும் மாமன்ற அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 62:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

---

2) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்டகீழ்க்காணும் பணிக்காக திரு.எஸ்.பி.பாண்டியன், உரிமதாரரால் முன்வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:

| வ.எண் | பணிவிபரம் | தொகை | வைப்புத் தொகைபதிவேடுபதிவவிபரம் |
|---|---|---|---|
| 1 | ஒருங்கிணைந்த ஆடறுப்பு மனை உரிமம் (2013-14) | 1,00,000/- | மேலப்பாளையம் மண்டலம் காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடு பக்க எண் 27 (2013-14) |
| 2 | திருமண மண்டப குத்தகை உரிமம் (2013-14) | 12,34,456/- | |
| | மொத்தம் | 13,34,456/- | |

உரிமதாரர் திரு.எஸ்.பி.பாண்டியன் 28.04.2018 அன்று நடைபெற்ற சாலை விபத்தில் காலமாகிவிட்டதால்,அன்னாரது மனைவியும், வாரிசுதாரருமான திருமதி.எஸ்.பி.சாந்தி என்பவர் மேற்கண்டவாறு செலுத்திய முன்வைப்புத் தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். மேற்காணும் வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10000/-க்கும் அதிகமாக உள்ளதால் நகராட்சி நிர்வாக நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii)-ன்படி காலங்கடந்த வைப்புத் தொகை ரூ.13,34,456/-ஐ திருமதி.எஸ்.பி.சாந்தி என்பவருக்கு திரும்ப வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக் குறிப்பு

பொருளில் கண்டுள்ளபடி திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட ஒருங்கிணைந்த ஆடறுப்பு மனைக்குரிய உரிம வகைக்காக செலுத்திய வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/-க்கும் அதிகமாக உள்ளதால், நகராட்சி நிர்வாக நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii)-ன்படி காலங்கடந்த வைப்புத் தொகை ரூ.13,34,456/-ஐ உரிமதாரர் திரு.எஸ்.பி.பாண்டியன் 28.04.2018 அன்று நடைபெற்ற சாலை விபத்தில் காலமாகிவிடடதால் அன்னாரது மனைவியான திருமதி.எஸ்.பி.சாந்தி என்பவருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 63:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(அ1/7933/2019-மே.பா)

---

3) திருநெல்வேலி டவுன் நேதாஜி போஸ் மார்க்கெட் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ரூ.10.97 கோடி செலவில் புதிய கட்டுமான பணிகள் நடைபெற உள்ளதை முன்னிட்டு மேற்படி நேதாஜி போஸ் மார்க்கெட்டில் இயங்கி வந்த கடைகள் அப்புறப்படுத்தப்பட இருப்பதால், மேற்படி கடைகளின் உரிமதாரர்களுக்கு மாநகராட்சி பொருட்காட்சி திடல் மைதானத்தில் அமைக்கப்படும் தற்காலிக கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்வது தொடர்பாக 22.01.2020-ம் தேதிய மாநகராட்சி அலுவலர்கள் அடங்கிய குழுவினரின் கலந்தாய்வு கூட்ட நடவடிக்கையில் கீழ்கண்டவாறு மாத வாடகை நிர்ணயம் செய்யதீர்மானிக்கப்பட்டது.

1) 8 * 8 = 64 சதுரடி அளவிலான தற்காலிக 86 கடைகளுக்கு மாத வாடகையாக ரூ.1300/- நிர்ணயிக்கவும்,

2) மேலும் 10*20= 200 சதுரடி அளவிலான தற்காலிக கடைகளுக்கு மாத வாடகையாக ரூ.3900/- எனவும் நிர்ணயிக்கலாம் என ஆய்வு குழு பரிந்துரைத்துள்ளது. மேலும் நேதாஜி போஸ் மார்க்கெட் மற்றும் பொருட்காட்சி திடல் முகப்பில் உள்ள வணிக வளாகத்தில் ஏற்கனவே குத்தகைக்கு விடப்பட்ட நபர்களுக்கே தற்போது மேற்படி தற்காலிக கடைகள் ஒதுக்கீடு செய்யப்படுவதால் முன் வைப்புத் தொகை ஏதும் வசூலிக்க தேவையில்லை எனவும் குழு பரிந்துரைத்துள்ளது. மேற்படி குழுவின் பரிந்துரை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

பொருளில் கண்டவாறு பொருட்காட்சி திடலில் அமைக்கப்பட்டுள்ள நேதாஜி போஸ் மார்க்கெட் தற்காலிக 86 கடைகளுக்கு மாத வாடகையாகரூ.1300/- எனவும் மற்றும் நேதாஜி போஸ் மார்க்கெட்டில் ஏற்கனவே குத்தகைக்கு விடப்பட்ட நபர்களுக்கே தற்போது மேற்படி தற்காலிக கடைகள் ஒதுக்கீடு செய்யப்படுவதால் முன்வைப்புத் தொகை ஏதும் வசூலிக்க தேவையில்லை என்பது குறித்தும் மாமன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 64:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(அ1/125/2020-திலி)

---

4) திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனத்தின் கீழ், திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் கூடுதல் எல்.இ.டி மின்விளக்குகள் மற்றும் உயர் கோபுரமின் விளக்குகள் அமைத்தல் பகுதி -1 திட்டப் பணிக்கு ரூ.1000.00 இலட்சத்திற்கு, மேற்கொள்வதற்கு 8வது சீர்மிகு நகர இயக்குநர்கள் கூட்டத்தில் வரிசை எண் 15ல் தீர்மானிக்கப்பட்டதின் அடிப்படையிலும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 14595/2018/IHSDP-3 நாள் 07.01.2020-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், முதன்மை தலைமைப் பொறியாளர், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகம் செயல் முறை ஆணை ந.க.எண் 28430/2019/DO2, நாள் 28.01.2020-ன்படி தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டதின்படியும் மேற்படி திட்டப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 22/ சீர்மிகு நகரம்/ 2018-19/SCM -ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் மக்கள்குரல் தமிழ் நாளிதழின் அனைத்துப் பதிப்புகளிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 30.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 03.03.2020-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பின்னர் நிர்வாக காரணம் மற்றும் கொரானா (COVID19) முழு ஊரடங்கின் காரணங்களால் ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் 08.06.2020 வரை நீட்டிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. மின்னணு முறையில்லாத இருஉறை முறையில் (1) M/s.Akash Engineering Associates (P) Ltd, Chennai மற்றும் (2) M/s.Shabari Electricals, Chennai ஆகிய இரண்டு ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் 11.06.2020ல் தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை கூர்ந்தாய்வு செய்ததில் மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே தொழில்நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்வதால் அன்னார்களது விலைப்புள்ளி அட்டவணைகள் 15.06.2020ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | துறையின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | M/s.Akash Engineering Associates (P) Ltd, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | M/s.Shabari Electricals, Chennai நிறுவனத்தின ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி சீர்மிகு நகர திட்டத்தின் கீழ், திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் கூடுதல் எல்.இ.டி மின்விளக்குகள் மற்றும் உயர் கோபுரமின் விளக்குகள் அமைத்தல் பகுதி -1 | ரூ.9,50,10,017/- | ரூ.9,97,37,257/- 4.98% மதிப்பீட்டை விட அதிகம் | ரூ.10,34,59,113/- 8.89% மதிப்பீட்டை விட அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.Akash Engineering Associates (P) Ltd, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.9,97,37,257/- ஆனது மதிப்பீட்டை விட 4.98% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல எனக் கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 15.06.2020 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 17.06.2020-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று மதிப்பீட்டை விட 4.98% அதிகமான விலைவிகிதத்தில் பணியினை செய்யவும், தற்போது மேற்படி பணிக்கு தேவையான பொருட்கள், எரிபொருள் மற்றும் வேலை ஆட்களுக்கான கூலி ஆகியவை சந்தையில் எதிர்பாராதவிதமாக அதிகமாகிவிட்டபடியால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, 19.06.2020-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Akash Engineering Associates (P) Ltd, Chennai நிறுவனத்தின் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின்வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.9,97,37,257/- மதிப்பீட்டை விட 4.98% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக் கொள்வது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதீன்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் (Smart City Limited) -ன் கீழ், திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் கூடுதல் எல்.இ.டி மின்விளக்குகள் மற்றும் உயர் கோபுரமின் விளக்குகள் அமைத்தல் பகுதி -1 பணி மேற்கொள்வது அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், திட்டப்பணியாக இருப்பதாலும், பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு-1, அத்தியாயம் 2, உட்பிரிவு 2.7.2-ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில்கூட மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 19.06.2020-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Akash Engineering Associates (P) Ltd, Chennai நிறுவனத்தின் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.9,97,37,257/- மதிப்பீட்டை விட 4.98% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதீன்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி பணியின் மதிப்பிட்டுத் தொகை ரூ.1000.00 இலட்சத்திற்கு திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாகும் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 65:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.அ.எண். 22/திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம்/2018-19/SCM)

---

5) திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனத்தின் கீழ், திருநெல்வேலி மாநகராட்சி சுவாமி நெல்லையப்பர் சாலையில் அலங்காரவிளக்குகள் அமைத்தல் பகுதி -2 திட்டப் பணிக்கு ரூ.1150.00 இலட்சத்திற்கு, மேற்கொள்வதற்கு 8வது சீர்மிகு நகர இயக்குநர்கள் கூட்டத்தில் வரிசை எண் 16ல் தீர்மானிக்கப்பட்டதின் அடிப்படையிலும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 14595/2018/IHSDP-3 நாள் 07.01.2020-ன்படி- நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், முதன்மை தலைமைப் பொறியாளர், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகம் செயல் முறை ஆணை ந.க.எண் 28430/2019/DO2, நாள் 28.01.2020ன்படி தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டதின்படியும் மேற்படி திட்டப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 22/ சீர்மிகு நகரம்/ 2018-19/SCM-ன்படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் மக்கள்குரல் தமிழ் நாளிதழின் அனைத்துப்பதிப்புகளிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 30.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 03.03.2020-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பின்னர் நிர்வாக காரணம் மற்றும் கொரானா (COVID19) முழு ஊரடங்கின் காரணங்களால் ஒப்ப்நதப்புள்ளி பெறப்படும் நாள் 08.06.2020 வரை நீட்டிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. மின்னணு முறையில்லாத இரு உறை முறையில் (1) M/s.Akash Engineering Associates (P) Ltd, Chennai மற்றும் (2) M/s.Shabari Electricals, Chennai ஆகிய இரண்டு ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் 11.06.2020ல் தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை கூர்ந்தாய்வு செய்ததில் மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே தொழில்நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை

பூர்த்தி செய்வதால் அன்னார்களது விலைப்புள்ளி அட்டவணைகள் 15.06.2020ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | துறையின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | M/s.Akash Engineering Associates (P) Ltd, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | M/s.Shabari Electricals, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி சீர்மிகு நகர திட்டத்தின் கீழ், சுவாமிநெல்லையப்பர் சாலையில் அலங்காரவிளக்குகள் அமைத்தல் பகுதி -2 | ரூ.10,20,56,223/- | ரூ.10,71,32,174/- 4.97% மதிப்பீட்டை விட அதிகம் | ரூ.11,11,27,294/- 8.89% மதிப்பீட்டை விட அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.Akash Engineering Associates (P) Ltd, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.10,71,32,174/- ஆனது மதிப்பீட்டை விட 4.97% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல எனக் கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 15.06.2020 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 17.06.2020-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று மதிப்பீட்டை விட 4.97% அதிகமான விலைவிகிதத்தில் பணியினை செய்யவும், தற்போது மேற்படி பணிக்கு தேவையான பொருட்கள், எரிபொருள் மற்றும் வேலை ஆட்களுக்கான கூலி ஆகியவை சந்தையில் எதிர்பாராதவிதமாக அதிகமாகிவிட்டபடியால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, 19.06.2020-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Akash Engineering Associates (P) Ltd, Chennai நிறுவனத்தின் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின்வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.10,71,32,174/- மதிப்பீட்டை விட 4.97% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக் கொள்வது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதீன்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் (Smart City Limited)-ன் கீழ், திருநெல்வேலி மாநகராட்சி சுவாமிநெல்லையப்பர் சாலையில் அலங்காரவிளக்குகள் அமைத்தல் பகுதி-2 பணி மேற்கொள்வது அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், திட்டப்பணியாக இருப்பதாலும், பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு-1, அத்தியாயம் 2, உட்பிரிவு 2.7.2-ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 19.06.2020-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Akash Engineering Associates (P) Ltd, Chennai நிறுவனத்தின் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.10,71,32,174/- மதிப்பீட்டை விட 4.97% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதீன்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி பணியின் மதிப்பிட்டுத் தொகை ரூ.1150.00 இலட்சத்திற்கு திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாகும் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 66:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.அ.எண். 22/திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம்/2018-19/SCM)

---

6) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் திருநெல்வேலி பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். புதிய பேருந்து நிலையம் அருகில் அறிவியல் பூங்கா அமைக்கும் திட்டப் பணியினை ரூ.4.94 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 9வது சீர்மிகு நகர இயக்குநர்கள் கூட்டத்தில் வரிசை எண் 5ல் தீர்மானிக்கப்பட்டதின் அடிப்படையிலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 14595/2018/IHSDP-3, நாள் 22.02.2020-ல் ரூ.4.94 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், முதன்மை தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 4162/2020/DO2 நாள் 28.02.2020-ன்படி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின் படியும் மேற்படி திட்டப்பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 25/2018-19/SCM-ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் தினத்தந்தி தமிழ் நாளிதழிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 27.02.2020-ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்யப்பட்டதின்படி மின்னணு மற்றும்மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு 31.03.2020-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பின்னர் 25.03.2020ல் கொரானா (COVID-19) வைரஸ் நோய் தொற்று காரணமாக முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட நிலையில் ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் 08.06.2020 வரை நீட்டிக்கப்பட்டதில் மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் (1)M/s.Sahusons interiors and Builders Pvt Ltd & M/s.Ankidyne (J.V.), Chennai மற்றும் (2) M/s.Creative Teaching, Chennai ஆகிய இரண்டு நிறுவனங்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் குறித்து ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் 09.06.2020ல் திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டதில் M/s.Creative Teaching, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கை நாள் 11.06.2020ன்படி மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான (1) M/s.Sahusons interiors and Builders Pvt Ltd & M/s.Ankidyne (J.V.), Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்தமையால் மேற்படி நிறுவனத்தின் விலை அட்டவணை 15.06.2020 ம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்த மதிப்பு | M/s.Sahusons interiors and Builders Pvt Ltd & M/s.Ankidyne (J.V.), Chennai நிறுவனத்தின் ஒப்பந்த மதிப்பு |
|---|---|---|---|
| 1 | சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் திருநெல்வேலி பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். புதிய பேருந்து நிலையம் அருகில் அறிவியல் பூங்கா அமைத்தல் | ரூ.4,79,26,285/- | ரூ.5,06,05,912/- |
| | | | 5.59% மதிப்பீட்டை விட அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மெசர்ஸ் M/s.Sahusons interiors and Builders Pvt Ltd & M/s.Ankidyne (J.V.), Chennai நிறுவனம் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள தொகை ரூ.5,06,05,912/-ஆனது மதிப்பீட்டை விட 5.59% அதிகமாக உள்ளதால் இது

ஏற்கதக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 15.06.2020 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 17.06.2020-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஓப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டைவிட 5.59% அதிகமான விலை விகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 4.96% அதிகமான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளார். இருப்பினும் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு M/s.Sahusons interiors and Builders Pvt Ltd & M/s.Ankidyne (J.V.), Chennai நிறுவனத்தின் முதலாவது விலைக்குறைப்பு பேச்சுவார்ததையில் கொடுத்துள்ள தொகை ரூ.5,03,03,429/- ஆனது மதிப்பீட்டை விட 4.96% அதிகமாக உள்ளதால் ஒப்பந்ததாரரை மீண்டும் விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 17.06.2020 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 19.06.2020-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று தற்போது மேற்படி பணிக்கு தேவையான கட்டிடப் பொருட்கள், குறிப்பாக எரிபொருள் மற்றும் வேலை ஆட்களுக்கான கூலி ஆகியவை சந்தையில் எதிர்பாராதவிதமாக அதிகமாகிவிட்டபடியால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, 19.06.2020-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Sahusons interiors and Builders Pvt Ltd & M/s.Ankidyne (J.V.), Chennai; நிறுவனத்தின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.5,03,03,429/- மதிப்பீட்டைவிட 4.96% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) மேற்படி,திருநெல்வேலி மாநகராட்சி- திருநெல்வேலி சீர்மிகு நகர (Smart City Limited) திட்டத்தின் கீழ் திருநெல்வேலி பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். புதிய பேரூந்து நிலையம் அருகில் அறிவியல் பூங்கா அமைக்கும் பணி அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், திட்டப்பணியாக இருப்பதாலும், பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு-1, அத்தியாயம் 2, உட்பிரிவு 2.7.2-ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 19.06.2020-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Sahusons interiors and Builders Pvt Ltd & M/s.Ankidyne (J.V.), Chennai நிறுவனத்தின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.5,03,03,429/-மதிப்பீட்டை விட 4.96% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதீன்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 67:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.அ.எண். 25/2018-19/SCM)

---

7) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் திருநெல்வேலி சந்திப்பு ரயில் நிலையம் அருகில் த.மு.சாலையில் அடுக்குமாடி இரு சக்கர வாகன காப்பகம் அமைக்கும் திட்டப்பணியினை ரூ.6.75 கோடியில் மேற்கொள்வதற்கு 8வது சீர்மிகு நகர இயக்குநர்கள் கூட்டத்தில் வரிசை எண் 14ல் தீர்மானிக்கப்பட்டதின் அடிப்படையிலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.14595/2018/IHSDP-3 நாள் 09.01.2020-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும் முதன்மை தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.1473/2020/DO2, நாள்

03.02.2020-ன்படியும் மேற்படி திட்டப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 22/ சீர்மிகு நகரம்/ 2018-19/SCM-ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் மக்கள்குரல் தமிழ் நாளிதழின் அனைத்துப் பதிப்புகளிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 30.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 03.03.2020-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. அதன் பின்னர், இரண்டாவது அழைப்பாக மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 26/2018-19/SCM-ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் தினமணி தமிழ் நாளிதழிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 26.03.2020-ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி மேற்படி பணிக்கு மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு 13.04.2020-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட நிலையில், கொரானா (COVID-19) வைரஸ் நோய் தொற்று காரணமாக 25.03.2020 முதல் முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட நிலையில் ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் 08.06.2020 வரை நீட்டிக்கப்பட்டதில் மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை. மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளி மெசர்ஸ்.Jeyes Builders, திருநெல்வேலி என்ற நிறுவனத்திடம் இருந்து மட்டும் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு தொழில்நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவால் 11.06.2020ல் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் அன்னாரது ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்தமையால் மேற்படி நிறுவனத்தின் விலைப்புள்ளி அட்டவணை 15.06.2020 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்த மதிப்பு | மெசர்ஸ்.Jeyes Builders, திருநெல்வேலி நிறுவனத்தின் ஒப்பந்த மதிப்பு |
|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி சந்திப்பு ரயில் நிலையம் அருகில் த.மு.சாலையில் அடுக்குமாடி இரு சக்கர வாகன காப்பகம் அமைத்தல் | ரூ.6,40,09,875/- | ரூ.7,08,59,395/- |
| | | | 10.70% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான மெசர்ஸ்.Jeyes Builders, திருநெல்வேலி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 10.70% கூடுதலான விலைவிகிதம் கொடுத்துள்ளமையால், மேற்படி நிறுவனத்திடம் விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு 15.06.2020ல் கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கு மெசர்ஸ்.Jeyes Builders, திருநெல்வேலி நிறுவனம் தனது 17.06.2020-ம் தேதிய கடிதத்தில் மதிப்பீட்டை விட 10.70% கூடுதலான விலை விகிதத்தில் இருந்து குறைத்து மதிப்பீட்டை விட 9.95% (ரூ.7,03,78,858/-) கூடுதலான விலை விகிதத்தில் பணியினை செய்வதற்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி விலை விகிதமும் ஏற்புடையதல்ல என கருதி மீண்டும் விலைக்குறைப்பு பேச்சுவார்ததைக்கு 17.06.2020 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு ஒப்பந்தக்காரர் தனது 19.06.2020ம் தேதிய கடிதத்தில் மேற்படி பணிக்கான தயார் செய்யப்பட்ட மதிப்பீடு 2019-20ம் ஆண்டுக்கான விலை விகிதத்தின்படி தயாரிக்கப்பட்டுள்ளதாலும் தற்போது கட்டுமானப் பொருட்கள், எரிபொருள் மற்றும் போக்குவரத்து செலவினம் அதிகமாகி விட்டபடியாலும்,மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும் முடிவாகவும் தெரிவித்துள்ளது.

மேற்படி விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்கு பின்வரும் மெசர்ஸ்.Jeyes Builders, திருநெல்வேலி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு (ரூ.7,03,78,858/-) என்பது 2019-20-ம் வருடத்திய துறை விலை விகிதத்தின்படி மதிப்பீட்டை விட 9.95% கூடுதலாக இருப்பதால், மேற்படி திட்டப்பணியின் அவசர அவசியம் கருதீ விலைக்குறைப்பிற்கு பின்வரும் ரூ.7,03,78,858/- ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்வது தொடர்பாக 2020-21 ம் வருடத்திய

விலை விபர பட்டியல் (Data 2020-21)-ஐ சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகத்தில் ஒப்புதல் பெற்று மேல்நடவடிக்கை தொடர 19.06.2020ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் முடிவு செய்திருப்பதின்படி மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் திருநெல்வேலி சந்திப்பு ரயில் நிலையம் அருகில் த.மு.சாலையில் அடுக்குமாடி இரு சக்கர வாகன காப்பகம் அமைக்கும் பணிக்கு விலைக்குறைப்பிக்கு பின்வரும் மெசர்ஸ்.Jeyes Builders நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.7,03,78,858/- என்பது 2019-20-ம் வருடத்திய துறை விலை விகிதத்தின்படி மதிப்பீட்டை விட 9.95% கூடுதலாக இருப்பதால் மேற்படி திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி விலைக்குறைப்பிற்கு பின்வரும் ரூ.7,03,78,858/- ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்வது குறித்து 19.06.2020ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையின் படி 2020-21 ம் வருடத்திய விலை விபர பட்டியல் (Data 2020-21)-ஐ சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகத்தில் ஒப்புதல் பெற்று மேல்நடவடிக்கை தொடர மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 68:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.அ.எண். 26/2018-19)

---

8) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். புதிய பேருந்து நிலையம் மேம்படுத்தும் பணியினை ரூ.14.27 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 9வது சீர்மிகு நகர இயக்குநர்கள் கூட்டத்தில் வரிசை எண் 4-ல் தீர்மானிக்கப்பட்டதின் அடிப்படையிலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 14595/2018/IHSDP-3 நாள் 22.02.2020-ல்ரூ.14.27 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், முதன்மை தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 4160/2020/DO2 நாள் 28.02.2020--ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின்படியும் மேற்படி திட்டப் பணியினை மேற்கொள்வதற்கு, ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 25/2018-19/SCM -ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் தினத்தந்தி தமிழ் நாளிதழிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 27.02.2020-ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்யப்பட்டதின்படி மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு 31.03.2020-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பின்னர் 25.03.2020ல் கொரானா (COVID-19) வைரஸ் நோய் தொற்று காரணமாக முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட நிலையில் ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் 08.06.2020 வரை நீட்டிக்கப்பட்டதில், மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் (1) மெசர்ஸ். ஸ்ரீ நாச்சிமார் இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், நாமக்கல் மற்றும் (2) மெசர்ஸ். ஸ்ரீரமணா பில்டிங் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட், இராமநாதபுரம் ஆகிய இரண்டு நிறுவனங்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் குறித்து ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் 09.06.2020-ல் திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டதில் மெசர்ஸ். ஸ்ரீ நாச்சிமார் இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால், ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கை நாள் 11.06.2020 ன்படி மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான மெசர்ஸ். ஸ்ரீரமணா பில்டிங் கன்ஸ்ட்ரக்ஸன் பிரைவேட் லிமிடெட், ராமநாதபுரம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்தமையால் மேற்படி நிறுவனத்தின் விலை அட்டவணை மட்டும் 15.06.2020 ம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்த மதிப்பு | மெசர்ஸ். ஸ்ரீரமணா பில்டிங் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட், இராமநாதபுரம் நிறுவனத்தின் ஒப்பந்த மதிப்பு |
|---|---|---|---|
| 1 | சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். புதிய பேருந்து நிலையம் மேம்படுத்தும் பணிகள் செய்தல். | ரூ.13,52,37,209/- | ரூ.15,59,98,980/- |
| | | | 15.35% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி மெசர்ஸ். ஸ்ரீரமணா பில்டிங் கன்ஸ்ட்ரக்ஸன் பிரைவேட் லிமிடெட், இராமநாதபுரம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 15.35% கூடுதலான விலைவிகிதம் கொடுத்துள்ளமையால், மேற்படி நிறுவனத்திடம் விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு 15.06.2020ல் கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கு மேற்படி நிறுவனம் தனது 17.06.2020-ம் தேதிய கடிதத்தில் 15.35%-ல் விலை விகிதத்தில் இருந்து குறைத்து 11.03% (ஒப்பந்த மதிப்பு ரூ.15,01,50,385/-) கூடுதலான விலை விகிதத்தில் மேற்படி திட்டப்பணியினை செய்ய சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி விலைவிகிதமும் ஏற்புடையதல்ல என கருதி மீண்டும் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்கு ஒப்பந்தக்காரருக்கு 17.06.2020ல் கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கு மேற்படி நிறுவனம் தனது 19.06.2020ம் தேதிய கடிதத்தில் மேற்படி பணிக்கான தயார் செய்யப்பட்ட மதிப்பீடு 2019-20ம் ஆண்டுக்கான விலை விகிதத்தின்படி தயாரிக்கப்பட்டுள்ளதாலும் தற்போது கட்டுமானப் பொருட்கள், எரிபொருள் மற்றும் போக்குவரத்து செலவினம் அதிகமாகி விட்டபடியாலும்,மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும் முடிவாகவும் தெரிவித்துள்ளது.

மேற்படி விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்கு பின்வரும் மெசர்ஸ். ஸ்ரீரமணா பில்டிங் கன்ஸ்ட்ரக்ஸன் பிரைவேட் லிமிடெட், இராமநாதபுரம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு (ரூ.15,01,50,385/-) என்பது 2019-20-ம் வருடத்திய துறை விலை விகிதத்தின்படி மதிப்பீட்டை விட 11.03% கூடுதலாக இருப்பதால், மேற்படி திட்டப்பணியின் அவசர அவசியம் கருதீ விலைக்குறைப்பிற்கு பின்வரும் (ரூ.15,01,50,385/-) ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்வது தொடர்பாக 2020-21 ம் வருடத்திய விலை விபர பட்டியல் (Data 2020-21)-ஐ சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகத்தில் ஒப்புதல் பெற்று மேல்நடவடிக்கை தொடர 19.06.2020ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் முடிவு செய்திருப்பதின்படி மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். புதிய பேருந்து நிலையம் மேம்படுத்தும் பணியினை மேற்கொள்வதற்கு விலைக் குறைப்பிற்கு பின்வரும் மெசர்ஸ். ஸ்ரீரமணா பில்டிங் கன்ஸ்ட்ரக்ஸன் பிரைவேட் லிமிடெட், இராமநாதபுரம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு (ரூ.15,01,50,385/-) என்பது 2019-20-ம் வருடத்திய துறை விலை விகிதத்தின்படி மதிப்பீட்டை விட 11.03% கூடுதலாக இருப்பதால் மேற்படி திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி விலைக்குறைப்பிற்கு பின்வரும் (ரூ.15,01,50,385/-) ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்வது குறித்து 19.06.2020ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையின் படி 2020-21 ம் வருடத்திய விலை விபர பட்டியல் (Data 2020-21)-ஐ சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகத்தில் ஒப்புதல் பெற்று மேல்நடவடிக்கை தொடர மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 69:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.அ.எண். 25/2018-19)

9) திருநெல்வேலி மாநகராட்சியில் பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகளை நான்கு மாத காலத்திற்கு மேற்கொள்ளுதல் பணிக்கு ரூ.49.80 இலட்சத்திற்கு மாமன்ற தீர்மான எண்146 நாள் 25.02.2020-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படி மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 32/2019-20ன் படி மாவட்ட அளவில் தினச்சூரியன் தமிழ் நாளிதழில் 16.04.2020 அன்றும் மற்றும் தினமுரசு தமிழ் நாளிதழில் 17.04.2020 அன்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி மேற்படி பணிக்கு மின்னணு மற்றும் மூடிமுத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு 04.05.2020-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. மின்னணு முறை அல்லாத இரு உறை முறையிலான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் 2 எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் 05.05.2020 அன்று தொழில்நுட்ப தகுதிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் (1) திரு.எஸ்.ஜான் ஜெலஸ்டின் அவர்களது ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் தகுதியிழந்ததாக கருதப்பட்டு நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள (2) திரு.எஸ்.செல்வம் அவர்களது ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்வதால் அன்னாரது விலைப்புள்ளி அட்டவணை மட்டும் 07.05.2020 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | துறையின் மதிப்பு ரூ. | ஒப்பந்தப் புள்ளி மதிப்பு ரூ. | சதவிகிதம் % |
|---|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாநகராட்சியில் பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகளை நான்கு மாத காலத்திற்கு மேற்கொள்ளுதல் | திரு.எஸ்.செல்வம் | 49,19,748/- | 52,66,240/- | மதிப்பீட்டை விட 7.04% அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு, மேற்கண்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான திரு.எஸ்.செல்வம் ஒப்பந்ததாரரின் விலைவிகிதம் மதிப்பீட்டைவிட 7.04% அதிகமானதாக உள்ளதால், அது ஏற்கத்தக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரிடம் விலைக்குறைப்பு செய்ய முடிவு செய்து அதன்படி ஒப்பந்ததாரருக்கு 07.05.2020 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்த நிறுவனம் தமது 08.05.2020ம் தேதிய கடிதத்தில் இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட 7.04% அதிகமான விலைவிகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 4.95% அதிகமான விலைவிகிதத்தில் பணியினை செய்யவும், தற்போது மேற்படி பணிக்கு தேவையான வேலை ஆட்களுக்கான கூலி எதிர்பாராதவிதமாக அதிகமாகிவிட்டபடியால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

| வ. எண் | பணியின் பெயர் | துறையின் மதிப்பு | விலைக் குறைப்பிற்கு பின் திரு.எஸ்.செல்வம் ஒப்பந்ததாரரின் அவர்களின் ஒப்பந்தமதிப்பு |
|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாநகராட்சியில் பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகளை நான்கு மாத காலத்திற்கு மேற்கொள்ளுதல் | ரூ.49,19,748/- | ரூ.51,63,275/- மதிப்பீட்டை விட 4.95% அதிகம் |

எனவே, 08.05.2020-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் திரு.எஸ்.செல்வம் ஒப்பந்ததாரரின் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.51,63,275/- மதிப்பீட்டைவிட 4.95% கூடுதலான

ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக் கொள்வது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகளை நான்கு மாத காலத்திற்கு மேற்கொள்ளுதல் பணி அத்தியாவசியமான பணியாக இருப்பதால் பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு-1, அத்தியாயம் 2, உட்பிரிவு 2.7.2-ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 08.05.2020-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் திரு.எஸ்.செல்வம் ஒப்பந்ததாரரின் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.51,63,275/- மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 70:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.அ.எண். 32/2019-20)

---